பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 23 சனிக்கிழமை 09.09.2023 கதிர் 302

# இலக்கம் பொறிக்கப்பட்ட போராளி ஆடைகளுடன் கொக்குத்தொடுவாயில் நேற்று 2 எலும்புகள் மீட்பு

## மேலும் பல மனித எச்சங்களும் குழியில் அவதானிப்பு




(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழியில் இருந்து, தமிழீழ விடுதலைப்புலிகள்இயக்கத்தினது பெண் போராளிகளினது என்று கருதப்படும் ஆடைகளுடன் கூடிய முழுமையான இரு மனித எலும்புக்கூடுகள் நேற்று மீட்கப்பட்டன. அத்தோடு, புதை குழியின் அடுத்தடுத்த அடுக்குகளில் மேலும் பல ☞ 2

## இது ரகசியம் அல்ல!

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அப்பக் கதை மிகப் பிரபலம். முதல் நாள் மாலையில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அளித்த விருந்தில் அவரோடு அமர்ந்திருந்து அப்பம் சாப்பிட்டவரான - அவரது கட்சியிலேயே இருந்து அமைச்சுப் பதவியையும் பெற்றிருந்தவரான - மைத்திரிபால சிறிசேன மறுநாள் காலை மகிந்தவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகத் தன்னை அறிவித்தார். இந்த அதிரடி அறிவிப்புக் குறித்து முதல்நாள் இரவுவரை மகிந்தவுக்குக் கிஞ்சித்தும் சந்தேகம் எழாத வகையில் அவர் நடந்துகொண்டார்.

கடைசிவரைநம்பவைத்துக்கழுத்தறுப்பது என்பார்களே அப்படி ஒரு சம்பவம் அது. நீண்ட காலமாக இந்த அப்பக் கதை அரசியலிலும் சரி பொது வாழ்விலும் சரி புகழ்பெற்றிருந்தது. ஒரு காலத்தில் துரோகம் என்றால் அது கருணா என்று விளிக்கப்பட்டதைப் போன்று, கூற இருந்தே குழிபறிப்பதற்கு "அப்பம் சாப்பிட்ட" ☞ 2

## தோல்வி!

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று தோற்கடிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணை 40 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்குஆதரவாக73வாக்குகளும், எதிராக 113 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்த்தன சபையில் முன்வைத்திருந்தார்.

மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துக் கொள்வனவு, மருத்துவ ☞ 2

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து செப். 21,22 இரண்டு நாள் விவாதம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் செப்டெம்பர் 21, 22 நாடாளுமன்றில் இடம்பெற வுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது,

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டிருப்பதாக நாடாளு மன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக, நாடாளுமன்றம் செப்டெம்பர் 19 முதல் 22 வரை கூடவுள்ளதுடன், செப். 19, 20 மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரைவாய்மூலவிடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 19 மு.ப 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரைஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் கொழும்பு துறைமுக நரகப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின்கீழ்வெளியிடப்பட்ட 2334/47ஆம் இலக்க வர்த்தமானியில் ☞ 2

# வைத்தியசாலைகளை கொலைக்களமாக்கி அச்சத்தை விதைக்கின்றன எதிர்க் கட்சிகள்

## அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

வைத்தியசாலையில் கொலைகள்நிகழ்வதாகஏழை மக்கள் மத்தியில் அச்சத்தை விதைக்கிறது எதிர்க்கட்சி என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

ஏழை மக்கள் இறுதியாக செல்கின்ற இடம் வைத்தியசாலைகளாகும். அந்த வைத்தியசாலைகளை தெரிவு செய்து அங்கு செல்ல வேண்டாம்அவைஇறப்புகள் இடம்பெறும் பகுதிகள் என்ற பரப்புரையை எதிர்க்கட்சி முன்னெடுத்து வருகிறது.

வைத்தியசாலைகளில் கொலைகள் நிகழ்வதாக மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில்கருத்துக்கள்வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் தனது அரசியல் செயற்பாடுகளைமுன்னெடுப்பதற்காக இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்.

அவருடையகருத்துக்கள் காரணமாக சாதாரண மக்களுக்குகிடைக்கவேண்டிய சேவைத் துறையின் செயற்பாடுகள் இல்லாது செய்யப்படுகின்றது. அரசியல் செய்வதற்காக சுகாதாரத் துறையை பயன்படுத்த வேண்டாம்.

மக்களின் உயிரிழப்புகளை பார்த்துக் கொண்டு தமது ☞ 2

# இறப்பை விதி எனத் தெரிவிக்க சுகாதார அமைச்சர் தேவையா?

## வைத்திய நிபுணர் சுதர்ஷினி எம்.பி. கேள்வி



வைத்தியசாலையில் நிகழும் இறப்புக்களை விதி என்று கூறும் ஒரு சுகாதார அமைச்சர்நமக்குத்தேவையா என்று சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

இறப்புச் சம்பவிக்கும் சமயத்தில் அது விதி என்று சுகாதார அமைச்சர் கூறுகின்றார். அதன் காரணமாகவே வைத்தியசாலை அருகில் மலர்சாலைகள் இருப்பதாகவும் அவர் கூறினார். இவ்வாறு கூறுவதற்கு சுகாதார அமைச்சர் ஒருவர் நமக்கு தேவையா என்கின்ற கேள்வி எழுகிறது.

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நகைச்சுவையான கருத்துக்களை கூறுகின்றார். அவ்வாறு நகைச்சுவையான கருத்துக்களைச் சொல்வதற்கு அந்நிறுவனத்திற்கு தலைவர் ஒருவர் தேவையாக உள்ளாரா என்ற கேள்வி உள்ளது - என்றார்.

# இந்த ஆட்சி தோற்றுவிட்டது மைத்திரி சபையில் சீற்றம்

இந்த ஆட்சி தோல்வியடைந்துவிட்டது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

தற்போதும் நாட்டில் அரசியல் மற்றும் ☞ 2

# சுயாதீனமாக இயங்க பெரமுன எம்.பி. முடிவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படுவதற்குதீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் தனது தீர்மானத்தினை வெளிப்படுத்தியபோதேஅவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவித் ததாவது:

நான் 2020 இல் ஒரு முறைமை மாற்றத்துக்காக நாடாளுமன்றத்தில் நுழைந்தேன். அது விரைவில் நடக்கும் என்று நான் பார்க்கவில்லை. இந்த நாட்டில் குடும்ப அரசியல் சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும். எங்களைப்போன்றசாதாரண குடும்பங்களைச் ☞ 2

# ஐ.நா. வரையும் செல்கிறது சுகாதாரத் துறை பிரச்சினை

சுகாதார அமைச்சர் பிரச்சினையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரை எடுத்துச் செல்லவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

நான் நாளைய தினம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினுடைய கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜெனிவாவுக்கு செல்ல உள்ளேன். அங்குசெல்லும்நான்சுகாதார அமைச்சில் ஊழலுடன் தொடர்புடையவர்களைதடை செய்யுமாறு பகிரங்கமாக கோரிக்கைவிடுக்கஉள்ளேன்.

இந்தக் கோரிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அனைத்து தரப்பிடமும் வலியுறுத்தவுள்ளேன். அதே நேரத்தில் நான் இன்னும் ஒரு விடயத்தை இணைத்து குறிப்பிட விரும்புகிறேன். கண்டி மாவட்ட மக்களை அவமானப்படுத்தும் வகையில் நாடாளு ☞ 2

# தரமற்ற மருந்தால் இனி யாரும் இறந்தால் ஆளும் தரப்பின் எம்.பிக்களே பொறுப்பு

தரம் குறைந்த மருந்துகளால் இனி இறப்பு சம்பவித்தால் அதற்கு ஆளும் தரப்புநாடாளுமன்ற உறுப்பினர்களே பொறுப்பு, மக்கள் அவர்களிடமே அது குறித்துக் கேள்வி எழுப்பவேண்டும் என்றுஐக்கியமக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

சுகாதார அமைச்சராக பதவியேற்று நீங்கள் சுகாதார அமைச்சைப் ☞ 2

# வைசாலிக்காக குரல் கொடுத்த விமல்

## மருந்தின் காரணமாக கை அகற்றப்படவில்லையென அமைச்சர் பதில்

யாழ். போதனா வைத்தியசாலையில்காய்ச்சல் சிகிச்சைக்காகச்சேர்க்கப்பட்ட எட்டு வயதுச் சிறுமியின் கை மணிக்கட்டுக்கு கீழ் அகற்றப்பட்டமை தொடர்பில் தேசியசுதந்திரமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கெஹலியவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதன்போது, குறித்த சம்பவம்ஏற்றப்பட்டமருந்தின் காரணமாகஇடம்பெறவில்லை என்றும் விசாரணைகள் தொடரப்படுவதாகவும் அமைச்சர் கெஹலிய பதிலளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய விமல் வீரவன்ச, யாழ்ப்பாணம்மல்லாகத்தைச் சேர்ந்த சாண்டில்யன் வைசாலி என்கின்ற 8 வயது சிறுமியினுடைய கையானது மணிக்கட்டுக்கு கீழ் யாழ்.போதானா வைத்தியசாலையில் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த சிறுமியினுடைய பெற்றோர் வைத்தியசாலையும் பணிப்பாளர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு அதற்கான காரணங்களை வினவமுற்பட்ட போதும் அதற்கான உரிய பதில்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

சுகாதாரஅமைச்சர்என்ற வகையில் இந்த விடயத்திற்கு எவ்விதமானநடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பதை இந்த இடத்தில் கேட்பதோடு அந்தசெயற்பாடுகளை ☞ 2

# அயலுறவு மற்றும் பாதுகாப்புக் குறித்த கொள்கைகளை இறுதி செய்ய உத்தரவு

## ஜனாதிபதி ரணில் விடுத்தார்

இலங்கையின் அயலுறவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசியக் கொள்கையைத் தயாரிப்பதுதொடர்பானவரைவுகளை இந்த வருட இறுதிக்குள் முடிக்குமாறு உரிய அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான கட்டமைப்பு, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அறிமுக நிகழ்வில் கையளிக்கப்பட்டது. இதன்போதேஅவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்செயல்திறனான நிர்வாகத்தை உருவாக்குவதில் ஒரு முக்கியமான தருணத்தை குறிக்கும் வகையில், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அமுலாக்க வரைவைவெளியிடும்வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது.

2017ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட இந்தக் கொள்கை 2018ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு அதிகாரப்பூர்வமாக ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அடைமொழி பயன்பாட்டில் இருந்தது.

அத்தகைய அப்ப வரலாற்றைக் கொண்ட மைத்திரி, இப்போது மீண்டும் அதேபோன்றதொரு தரமான சம்பவத்தை நிகழ்த்தியுள்ளார். ஜனாதிபதி வேட்பாளர் அளவுக்கு நேர்த்தியான சம்பவமாக இது இல்லையென்றாலும் அதற்குச் சோடை போகாத அளவிற்கு இதுவும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

கட்சியின் பொது மாநாடு நடத்தப்படும் வரைக்கும் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவை அந்தப் பதவியில் வைத்திருந்துவிட்டு, கூட்டம் முடிந்த கையோடு அவரை அந்தப் பதவியிலிருந்து தூக்கிக் கடாசி விட்டார் மைத்திரி.

பொதுக் கூட்டத்திற்கு முன்பாகவே அது தொடர்பில் சிறு சிறு சலசலப்புக்கள் இருந்தன. முதலில் பொலன்னறுவையில் கூட்டத்தை வைக்கத் தீர்மானித்து, தயாசிறிஅதற்கானஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்து முடித்த பின்னர் அதனை இடம்மற்றுவது என்று மைத்திரிதிடீர்தீர்மானத்தை எடுத்த காரணத்தால் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. தற்போது அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா போன்ற சுதந்திரக் கட்சியின் முக்கிய நபர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்குவசதியாக அதனைக் கொழும்புக்கு மாற்றுவது என்று மைத்திரி எடுத்த முடிவுக்கு தயாசிறி எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்த முரண்பாட்டால் தயாசிறி கட்சியிலிருந்து வெளியேறி எதிர்த் தரப்புப் பக்கத்தில் சேர்கிறார் என்றெல்லாம் முன்கூட்டியே செய்திகள் வந்தன. ஆனால், அவற்றை எல்லாம் மறுத்த மைத்திரி, தயாசிறியையும் சமாளித்துபொதுக்கூட்டத்தை நடத்தினார். தயாசிறியும் அதைநம்பிபொதுக்கூட்டத்தில் ஒற்றுமை பற்றியெல்லாம் உரையாற்றினார். ஆனால், மேடையை விட்டுக் கீழே இறங்கிய சூடு ஆறுவதற்கு முன்னரேபொதுச்செயலாளர் பதவியிலிருந்து அவரைத் தூக்கிவீசிவிட்டார் மைத்திரி.

இதனைஏன்அவர்செய்தார் என்பதற்குகொழும்புஅரசியல் வட்டாரங்களில் ஒரு கதை அடிபடுகின்றது. அடுத்துவரும் ஜனாதிபதித்தேர்தலில்ரணில் விக்கிரமசிங்கவைஆதரிப்பது என்று ஆட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சி அமைச்சர்களுடன் சேர்ந்து மைத்திரிமுடிவுசெய்துவிட்டார் என்றும் தயாசிறி அந்த முடிவுக்கு ஒத்துவரமாட்டார் என்பதால் அவரை அப்புறப் படுத்திவிட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் முழுமையான ஆதரவை ரணிலுக்குப் பெற்றுக் கொடுப்பதானால்,தயாசிறியை அகற்றவேண்டியதுஅவசியம் என்கிற மூலோபாய அடிப்படையிலேயே அவர் அகற்றப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகின்றது. ரணிலை ஆதரிப்பதற்குப் பதிலாக சுதந்திரக் கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்பதே தயாசிறியின் நிலைப்பாடாக இருக்கின்றது.

ஓர் அரசியல் கட்சி யில், கட்சியின் முறையான முடிவுகளை பொதுச்செயலாளர் அங்கீகரிக்கிறார். ஒத்த எண்ணம் கொண்ட பிற கட்சிகளுடன் எந்தக் கூட்டணியில்இறங்கினாலும் அவருடைய கையெழுத்து முக்கியமானது. கட்சியின் முடிவுகள் குறித்து தேர்தல் ஆணையத்துடனும், நாடாளுமன்ற பொதுச் செயலாளருடனும் தொடர்பு கொள்ள அதிகாரம் பெற்ற நபரும் பொதுச் செயலாளர் ஆவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவை அடுத்த வேட்பாளராக முன்னிறுத்துவதில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவினால் ஒருங்கிணைக்கப்பட்டுவரும் புதிய கூட்டணியுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றனர். இவர்களின் பின்னணியுடனேயே தயாசிறியை கட்சிப்பதவியிலிருந்துதூக்கிக் கடாசி இருக்கிறார் மைத்திரி என்று சொல்லப்படுகின்றது.

ஸ்ரீ.ல.சு.க.வை ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) இணைப்பாக மாற்ற நினைத்தவர்களே தம்மை நீக்கியதன் பின்னணியில் இருப்பதாகவும் தயாசிறி தனக்கு நெருக்கமானவர்களிடம் புலம்பியிருக்கிறார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக்கூடுகள் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு மூன்று நாள்களாகத் தொடர்ந்து இடம்பெறும் நிலையில், நேற்றைய அகழ்வின்போது இந்த இரு இரு மனித எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆடைகளில், 3204 மற்றும் 3174 என்ற இலக்கங்கள் பெறிக்கப் பட்டிருந்த. விடுதலைப் புலிப் பெண் போராளிகள் பயன்படுத்தும் முறையில் இந்தஇலக்கங்கள்மீட்கப்பட்ட உள்ளாடைகளில் கறுப்புநிற நூலினால் தைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

நேற்றைய அகழ்வுகளின்போது, அந்தப் புதை குழிக்குள் மேலும் பல எலும்புக்கூடுகள் அடுத்தடுத்த அடுக்குகளில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் இக் குழியில் அதிகளவிலான மனித எச்சங்கள் மீட்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் செயல்பட வேண்டாம் என்று நான் அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

## சனல் 4....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 20 மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை (451ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2346/02ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில்பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அன்றையதினம் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை குறித்த விவாதத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 21, 22 மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதையதேசியபாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான முழுநாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நிலைமைகள் உக்கிரமடைந்துள்ளன. இந்த ஆட்சி தோல்வி அடைந்துள்ளது. ஆட்சி தோல்வி அடைந்ததன் காரணமாக சுகாதாரத் துறை மாத்திரம் அல்ல அரசமைப்பு பேரவையும் அரச நிறுவனங்களும் ஏனைய அனைத்துக் கட்டமைப்புக்களும் தோல்வியடைந்த நிலையில் செயல்படுகின்றன.

ஆட்சியாளர்களின் செயற்றிறன் இன்மை காரணமாகஅமைச்சர்ஒருவர் தெரிவிக்கின்ற கருத்தினை அதிகாரிகள் பொருட்படுத்தாத நிலைமையே நீடிக்கின்றன. அவர்கள்அந்தவிடயங்களை செயல்படுத்துவதில் இருந்து விலகி நிற்கின்றார்கள் - என்றார்.

## அயலுறவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டது. ஆனால், அது இதுவரை நடைமுறைப்படுத் தப்படவில்லை.

07 வருடங்களின் பின்னர் இன்று இந்த தேசிய கொள்கை அமுலாக்க வரைவை வெளியிடுவது ஆளும் தரப்பின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகக் குறிப்பிடலாம்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதில் நிதி அமைச்சு மற்றும்திட்டமுகாமைத்துவத் திணைக்களத்துக்கு முக்கிய பொறுப்பு உள்ளது. அரச கொள்கைகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி, மூன்று மொழிகளிலும் இந்தப் புதிய கொள்கையை நாடாளுமன்றத்தில்சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அரசின் அதிக செலவீனங்களைக்கொண்ட பத்து அமைச்சுகளின் செலவுகள் குறித்த பகுப்பாய்வு தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்த வருட இறுதிக்குள் வெளிவிவகாரக் கொள்கை வரைவைத் தயாரிக்குமாறுவெளிவிவகார அமைச்சருக்கு நான் பணிப்புரை விடுத்துள்ளேன்.

அத்துடன், நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக நீண்டகாலமாக அவதானத்தைப்பெற்றுவந்த தேசிய பாதுகாப்புக் கொள்கையை தயாரிக்குமாறும் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்படி அமைச்சின்செயற்பாடுகளை பின்பற்றி ஏனைய அமைச்சுக்களும் தேசிய கொள்கை கட்டமைப்பை பின்பற்ற வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளைஅடைவதற்காக அமைச்சுக்கள் மட்டத்தில் தேசிய கொள்கைகளை திறம்பட செயல்படுத்துவது அவசியமானது. அது திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் உதவியாக அமையும்.

ஏழு வருடங்களுக்கு முன்னர் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் தேவை குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. அதனைநனவாக்க அர்ப்பணிப்புக்களை செய்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

நிலையான தேசியக் கொள்கை இல்லாதது நாட்டின் ஆட்சி முறையில் காணப்படும் மிகப்பெரிய குறைப்பாடாகும். தேசியக் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக நடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவிற்குப் பெரும் பொறுப்பு உள்ளது. இந்தக் கொள்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

அரச நடவடிக்கைகள் தொடர்பில்வலுவானமதிப்பீடு மிகவும் முக்கியமானது. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை வலுவாக நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகளின்அர்ப்பணிப்பும் அவசியம்.

அரச சேவைக்குள் ஒழுக்கத்தையும் ஒழுங்கு முறைகளையும் உருவாக் குவதே இதன் மற்றுமொரு நோக்கமாகும். பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான நிலையான சூழலை பேணவும் ஆளும் தரப்பு மாறினாலும் நிலைத்திருக்கக்கூடியதாக இந்த கொள்கைகள் அமைய வேண்டும்.

இலங்கை இந்தக் கொள்கையுடன் முன்னோக்கிச் செல்லும்போது, தேசியக் கொள்கைகள் தொடர்பில் அதிக இணக்கப்பாடு ஏற்படும் என்றும் அதன் பயனாக விரிவான தேசியக் கொள்கை ஒன்றுக் கானவரைவுஉருவாவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் நம்புகிறோம்.

இந்தத் தேசிய கொள்கைகளுடன் முன்னோக்கிச் செல்லும் வழியை திட்டமிடும் தருணத்தில் கடன் நீடிப்பு தொடர்பான பேச்சு முன்னேற்கரமாக அமைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இதன்போது, அரசநிதிக் குழு மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கடுமையானவிமர்சனங்கள் மற்றும் சிக்கல்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க இணக்கப்பாடுகளைஎட்டவும் முடிந்துள்ளது - என்றார்.

## சுயாதீனமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இளைஞர்கள் இந்த நாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும். ஆகவே நான் சுயாதீனமாகச் செயற்படுவதெனத் தீர்மானித்துள்ளேன் - என்றார்

## தோல்வி!....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையின் போதான மரணங்கள், பாதிப்புக்கள் உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி சுகாதாரத்துறை அமைச்சருக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணை மீது புதன்கிழமை தொடக்கம் நேற்று வரை தொடர்ந்து 3 நாட்கள் விவாதம் இடம்பெற்றது. நேற்றுமாலை 5.35 மணிக்கு விவாதம் முடிவுக்கு வந்தது.

இதன்போது நம்பிக்கையில்லாப்பிரேரணையைச் சபை அனுமதிக்கின்றதா எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வாக்களிப்பு வேண்டுமெனக் கோரினார். அதன் பிரகாரம் மாலை 5.40 மணிக்கு இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

பிரேரணைக்கு ஆதரவாகபிரதானஎதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் எம்.பிக்களும், சுயாதீன எதிரணி எம்.பிக்களும் என 73 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை, நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு எதிராக அரச தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருடன் இணைந்து சுயாதீன எதிரணி எம்.பிக்களான நிமல் லான்சா, ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி என 113 பேர் வாக்களித்தனர்.

இதன்பிரகாரம் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை 40 மேலதிக வாக்குகளால் அரசு தோற்கடித்தது.

இந்தநம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் 38 பேர் பங்கேற்கவில்லை.

## வைசாலிக்காக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கு மாறும் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

இதற்கு பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலியரம்புக்வெல,யாழ்ப்பாணம் சம்பவம் தொடர்பாக விரிவான தகவல்களை கொண்ட அறிக்கை கிடைத்துள்ளது. தற்போது அந்தச் சம்பவம்குறித்துஉடனடியாக எந்த முடிவுக்கும் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் தொடர்ச்சியான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த சம்பவம் மருந்தின் காரணமாக இடம்பெறவில்லை என்ற விடயம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே அந்த சம்பவம்பற்றியஅறிக்கையை நான்சபையில்சமர்ப்பிப்பதற்கு தயாராகஉள்ளேன்-என்றார்.

''அமைச்சரே! சிறுமியின் பெற்றோர்கள் உரிய அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம் என்னிடம் உள்ளது அந்த கடிதத்தின் பிரதியை உங்களுக்கு தேவையென்றால் நான் அனுப்புவதற்குத் தயாராக உள்ளேன் உங்களுடைய வாட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவா? மருந்தின் காரணமாக இடம்பெற்றதா இல்லையா என்பதற்கு அப்பால் இந்த சம்பவத்துக்கான காரணம் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்" என்றார்.

## வைத்தியசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலை முன்னெடுப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தரம்குறைந்தமருந்துகள் இறக்குமதி செய்வதாக குற்றஞ்சாட்டுகின்றவர்கள் எவரும் என்னிடத்தில் எவ்விதமான சான்றாதாரங்களையும் வழங்கவில்லை. ஒரு கடதாசியைக்கூட கையளிக்கவில்லை.ஆகவே,பொய்யான பரப்புரைகளுக்குச்சுகாதாரத் துறையை பயன்படுத்த வேண்டாம் - என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு வெள்ளத்தைக் கட்டுப்படுத்த 59.5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்படும் வெள்ளத்தைகட்டுப்படுத்தும்வகையில் கால்வாய்கள், அணைகள் மற்றும்குட்டைகளைப்புனரமைக்கும்திட்டத்துக்காக திறைசேரியால் 59.5 கோடி ரூபா நிதி இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின்வேண்டுகோளுக்கு இணங்க, திறைசேரி இந்தப் பணத்தை ஒதுக்கியுள்ளது.

கொழும்பு நகரின் பிரதான கால்வாய் அமைப்பு 44 கி.மீ. இந்த ஏரிகள் மற்றும் கால்வாய்களில் பெரும்பாலானவை ஜப்பபான் கோர்ஸ் புல் மற்றும் துர்நாற்றம், சேற்று மண், பிளாஸ்டிக் போத்தல்கள், பியர் கேன்கள், செருப்புகள், சுகாதாரப் பொருள்கள், கழிவுநீர் மற்றும் எண்ணெய் போன்ற ஆக்கிரமிப்பு களைகளால் நிரப்பப்பட்டுள்ளன. இதனால், மிகக் குறைந்த மழை பெய்தாலும் கொழும்பு நகரின் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கும்.

எனவே, கொழும்பிலும் அதனைச்சூழவுள்ள பிரதான கால்வாய் அமைப்பு, நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனை அண்மித்துள்ள உடற்பயிற்சி நடை பாதைகள், குட்டைகள், பூங்காக்கள் ஆகிய-வற்றின் பராமரிப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி கொழும்புக்கு அருகில் வத்தளை நகரின் ஊடாக பாயும் ஹமில்டன் கால்வாயின் புனரமைப்பு இங்கு மேற் கொள்ளப்பட உள்ளது. ஹமில்டன் கால்வாய் 14.3 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது. நீர்கொழும்பு களப்பிலிருந்து களனி கங்கையின் முகத்துவாரம் வரையிலும், நீர்கொழும்பு களப்பிலிருந்து மஹா ஓயா வரையிலும் இந்த கால்வாய் பராமரிக்கப்பட உள்ளது.

நீரின் மேற்பரப்பில் உள்ள நீர்வாழ்தாவரங்களை அகற்றுதல், கால்வாய் கரைகளை பராமரித்தல், கால்வாயில் உள்ள சேற்று மண்ணை அகற்றுதல், அந்த சேற்றை பொருத்தமான இடங்களுக்கு கொண்டு செல்லுதல், கால்வாய் கரைகளை கேபியன்கள் மூலம் பாதுகாத்தல், தேவையற்றசெடிகளைஅகற்றுதல், குப்பை கழிவுகளை சுத்தம் செய்தல் போன்றவை. மேற் கொள்ளப்படவுள்ளது.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் கொழும்பு நகரையும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க இந்த கால்வாய்கள் மற்றும் குட்டைகளை தொடர்ந்து சுத்தம் செய்ய வேண்டும் எனவும் இதற்கு பொதுமக்களின் முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறோம் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

இந்த ஏரிகள் மற்றும் கால்வாய்களை புனரமைக்கும் போது அவற்றின் அசல் இடத்தை சேதப்படுத்த வேண்டாம் என்றும், அவற்றில் வாழும் நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த செடிகளை அகற்றாமல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த கால்வாய்களின் பராமரிப்பு பணிகள் இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் ஒருகொடவத்தை (கொழும்பு வடக்கு), நாவல கிரி மண்டல மாவத்தை (கொழும்பு கிழக்கு), கிருலப்பனை (கொழும்பு தெற்கு) மற்றும் முத்துராஜவெல (நீர்கொழும்பு) ஆகிய 4 முக்கிய பிரதேச அலுவலகங்களின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், பத்தரமுல்லை - தியத்த உயன, மாதிவெல - கிம்புலாவெல மற்றும் பெல்லன்வில ஆகிய அபிவிருத்தி செய்யப்பட்ட வளாகங்களில் அமைந்துள்ள உப அலுவலகங்கள் கால்வாய் பராமரிப்புப் பணிகள் மற்றும் நகரத்தை அழகுபடுத்தும் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளதாக இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (05)

# மத தலங்களில் திருடி வந்த தம்பதி உட்பட மூவர் கைது

உண்டியல் பணம், நகைகள், பெறுமதிமிக்க பித்தளை பொருள்களை பதுளையின் பகுதிகளிலும் உள்ள ஆலயங்கள், விகாரைகளில் உள்நுழைந்து கொள்ளையடித்து வந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் மூவர் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நு.ஆ. பியரட்ண தலைமையிலான குழுவினர் வீதி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில், சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளையும் நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பை ஒன்றில், ஆலயங்களில் உள்ள பித்தளை பொருள்கள் இருந்துள்ளன.

இதனையடுத்து குறித்த மோட்டார் சைக்கிளை சோதனைக்குட்படுத்தியதன் அடிப்படையில் பணம், பித்தளை பொருள்கள், தங்க நகைகள் அடகு வைத்ததற்கான பற்றுச் சீட்டுகள், கத்தி உட்பட மேலும் சில ஆயுதங்கள், 3 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 2 மோட்டார்சைக்கிள்களில்வந்த மூன்று சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்த மூவர் மீதும் சந்தேகம் கொண்ட பசறை பொலிஸார், இவர்களை பசறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது, ஹொப்டன் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றையும் பசறை பெல்காத்தன்ன பகுதியில் உள்ள விகாரை ஒன்றையும் உடைத்து இந்தப் பொருள்களைத் திருடியதாக கூறியுள்ளனர்.

இதற்கிடையில் பெல்காத்தன்ன விகாரையின் தேரரால் பெல்காத்தன்ன பகுதியில் அமைந்துள்ள விகாரை செவ்வாய்க்கிழமை இரவு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 25 வயதுடைய ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், 29, 20 வயதுகளையுடைய ஹாலிஎல, கனுபெலெல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரண்டு ஆண்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த இருவரும் கணவன், மனைவி எனவும் கனுபெலெல்ல பகுதியைச் சேர்ந்தவர் இவர்களது நண்பர் எனவும் பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் பதுளை பகுதிகளில் பல ருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (05)

# தடுப்பூசி ஏற்றிய 4 மாதக் குழந்தை இரு நாள்களின் பின் உயிரிழப்பு

## விசாரணைகள் தொடங்கின

மாத்தறை, வெலிகம பிரதேசத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்ட 4 மாத குழந்தை இரண்டு நாள்களுக்கு பிறகு உயிரிழந்த சம்பவம் தொடர்பில் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை கம்புறுப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பெண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

வெலிகம, நவகல பிரதேசத்தைச் சேர்ந்த 4 மாத குழந்தைக்கு கடந்த 2 ஆம் வெலிப்பிட்டிய சுகாதார காரியாலய அதிகாரிகளால் குறித்த தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர், குழந்தைக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக 5ஆம் திகதி இமதுவ ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நிலைமை மோசமடைய குழந்தை மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏற்றப்பட்ட தடுப்பூசி விம் அடைந்தமையாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர் என வெலிப்பிட்டிய சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், தடுப்பூசி ஏற்றப்பட்டு இரண்டு நாள்களுக்கு பின்னரே குழந்தை உயிரிழந்துள்ளது. தடுப்பூசி விமடைந்திருந்தால் குறுகிய காலப்பகுதிக்குள் மரணம் இடம்பெற்று இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பிரேத பரிசோதனைகளுக்காக பிறகே மரணத்துக்கான காரணத்தை உறுதியாக கூறலாம் என சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கம்புறுப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் சத்திர சிகிச்சையின் பின்னர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

காலி, பன்சலகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் குறித்த சத்திர சிகிச்சைக்காக கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் கடந்த மாதம் 27ஆம் சேர்க்கப்பட்டிருந்தார். அதற்கமைவாக 28 ஆம் திகதி அவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிகிச்சைக்கு பிறகு அவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் மாற்றப்பட்டு சில நாள்களுக்கு பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் சகோதரர்கள் கூறுகையில், வைத்தியசாலையின் வைத்தியர்களது கவனவீனம் காரணமாக இந்த மரணம் நேர்ந்துள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை, கம்புறுப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் ரஞ்சித் தர்மகீர்த்தி இது தொடர்பில் தெரிவிக்கையில் -

குறித்த மரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சத்திர சிகிச்சையின் போது தவறுகள் ஏற்படலாம். இருப்பினும் மருந்து தட்டுப்பாடு அல்லது ஒட்சிசன்களின் அளவில் எந்த வித குறைபாடுகளும் இருக்கவில்லை. எவ்வாறா-யினும் இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதவகையிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். கடந்த 4 வருடங்களுக்குள் இவ்வாறான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இதுவே முதல்தடவை. - என்றார். (05)

# அங்கஜனும் கோரிக்கை



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறச் சென்ற சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட சிறுமிக்கும் அவரது குடும்பத்துக்கும் நீதி கிடைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு-

மரணிக்கும் தருவாயில் இருக்கும் உயிரைக் கூட மருத்துவத்தால் மேலும் சில வருடங்களுக்கு வாழ வைக்கக்கூடிய தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்தில், அதே மருத்து-வத்தால் ஒரு பாலகியின் கை இழக்கப்பட்டுள்ளது.

இந்த துயரச் சம்பவத்தால் வைத்தியசாலைகளை நாட மக்கள் அச்சம் கொள்கின்றனர். வைத்தியசாலை சென்றால் வீடு திரும்புவோமா என்ற அச்சத்தையும் இந்த சம்பவம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அதிசிறந்த வைத்திய நிபுணர்களை கொண்ட எமது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை எத்தனையோ உயிர்களை இன்றும் வாழவைத்து வருகிறது. அதேசமயம் ஒரு சிலரின் அசண்டையீ-னங்களால் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்திவரலாற்றில் அழிக்க முடியாத கரும்புள்ளியையும் பதித்துவிடுகிறது. அவ்வாறான ஒரு சம்பவம்தான் இச்சிறுமியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட துயரமான நிகழ்வு.


கடவுளுக்கும் மேலாக நாம் வைத்தியர்களையும் சுகாதார தரப்பினரையும் நம்புகிறோம். அந்த நம்பிக்கையை அவர்கள் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்தும் காட்டியுள்ளனர். உதாரணமாக, கொரோனா பேரிடர் காலத்தில் அவர்கள் ஆற்றிய பணிகளை மறந்துவிட முடியாது. ஆனால், அதே சுகாதாரத்துறையில் ஒருசிலர் விடுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த பணியாளர்கள் மீதான நம்பிக்கையையும் ஒரே நொடியில் சிதைத்துவிடுகிறது.

பல எதிர்கால கனவுகளோடு தனது வாழ்வை வாழக்கூட ஆரம்பிக்காத அந்த சிறுமியாலும்,-சிறுமியின் குடும்பத்தாலும் நிச்சயமாக இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வந்த சிறுமி கையை இழந்ததை எந்த வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

அண்மைக் காலமாக இலங்கையின் மருத்து வத்துறை மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்களை இலகுவில் கடந்துவிட முடியாது. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதேபோன்று நடந்தது என்னவென்று இதுவரை உணர முடியாத இந்த பாலகிக்கும் பக்கச்சார்பற்ற நீதி கிடைக்க சுகாதார அமைச்சு மற்றும் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# கை அகற்றப்பட்ட சிறுமிக்கு நீதியான விசாரணை தேவை

## விக்னேஸ்வரனும் வலியுறுத்து



இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சிறுமி வைசாலியின் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற்று குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவம் மன வேதனையை தருகிறது.

நான் நீதிபதியாக செயற்பட்டவன் என்ற நீதியில் விசாரணை முடிவுறாமல் இவர்கள் தான் குற்றவாளி எனக் கூற முடியாது.

தாதியர்களின் தவறே சிறுமியின் கை துண்டிக்க பிரதான காரணம் என செய்திகள் வெளியாகிய நிலையில் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

சிறுமி தனது கல்விக் காலம் திருமண வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் மற்ற இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)



# பொலிஸார் 10 பேர் திடீர் சுகவீனம்

## உணவு நஞ்சானதால்

உணவு விசமானதன் காரணமாக பயாகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் பத்து பேர் சுகவீனமடைந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோய்வாய்ப்பட்டவர்களில் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் இலஞ்ச ஒழிப்புப் பிரிவின் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களும் பெண்கள் மற்றும் பொலிஸாரும் உள்ளடங்குவதாகவும் கூறப்படுகிறது. நாகொட வைத்தியசாலையின் இரண்டு பொலிஸ் பரிசோதகர்கள், ஒரு பொலிஸ் பெண் மற்றும் ஒரு கான்ஸ்டபிள் ஆகியோர் சிகிச்சை பெற்று வருவதாகவும், ஏனையவர்கள் சிகிச்சை பெற்று செவ்வாய்க்கிழமை இரவு வெளியேறியுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிச்சை ஒழிப்பு

இலங்கையில் பிச்சை எடுப்பவர்கள் தொடர்பான கணக்கெடுப்பு சமூக சேவைகள் திணைக்களத்தினால் இம்மாதம் (புரட்டாதி) தொடங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் அதிகளவில் பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பொலிஸ், உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பூர்வாங்க கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல்தொடர்பானஅமைச்சர்களின்ஆலோசனைக் குழு அண்மையில் அமைச்சர் குமாரசிங்க மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்திருந்தார்.

குழந்தைகளைப் பிச்சை எடுக்கவிடுவதும், சில குழந்தைகளுக்கு போதை மருந்து கொடுத்து பிச்சை எடுக்க வைப்பதும், கர்ப்பிணி போல் பெண்களை நடிக்க வைத்துப் பிரச்சை எடுக்க வைப்பதும் வியாபாரமாகி விட்டதாக அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. பிச்சை எடுப்பதைத் தவிர்ப்பதற்குச் சட்ட ஏற்பாடுகள் இருந்தாலும், நடைமுறை மட்டத்தில் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் அறிவித்தது போன்று பிச்சை எடுப்பவர்கள் தொடர்பான கணக்கெடுப்பை நடத்தினாலும்கூட இந்தப் பிரச்சினையை அதனூடாகத் தீர்க்க முடியாது. பிச்சை எடுப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. பிச்சை எடுப்பவர் பெரிய மாளிகை, சொகுசு மகிழ் உந்து (கார்) உட்படப் பலவற்றைத் தனது உடமையாக வைத்திருந்தார் என்றும், திடீரென உயிரிழந்துபோன பிச்சைக்காரரிடம் பல லட்சம் ரூபாய்கள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன என்றும், பிச்சைக்காரர்களின் வங்கிக் கணக்கில் பெரும் தொகைப் பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது என்றும் கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ஆனால், அவற்றை மட்டும் வைத்து இந்தப் பிரச்சினையை அணுகிவிட முடியாது.

ஆதரவற்றவர்கள், பிள்ளைகளால்கைவிடப்பட்டவர்கள், உடல் உழைப்பை வழங்க முடியாதவர்கள் என்று பல தரப்பட்டவர்களும்கூட பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசு மூலம் வழங்கப்படும் சமூக உதவிக் கொடுப்பனவான ஒருசில ஆயிரம் ரூபாய்கள் உயிர் வாழ்வதற்குக்கூடப் போதுமானதாக இல்லை என்கிறபோது, அவர்களைப் பிச்சை எடுக்கக்கூடாது என்று தடுப்பது மனிதாபிமானம் மிக்கதல்ல. அரச உதவித் தொகை ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையை மதிப்போடு வாழ்வதற்குத் தேவையான அளவில் இருந்தால் அப்போது பிச்சையை தடுப்பது குறித்துச் சிந்திக்க முடியும்.

அரச முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள்மட்டுமே இதற்கானதீர்வாக அமையமுடியாது. இத்தகைய இல்லங்களில் இருக்கவிருப்பமின்றி தனித்து வாழ விரும்பும் தனியன்களும் வாழத் தேவையான அடிப்படைக் கொடுப்பனவை அவர்களுக்கு வழங்க அரசு சமூக உதவித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதுதான் பிச்சைக்காரர்களைக் குறைப்பதற்கான வழிவகையாக இருக்கமுடியும். தவிர, பிச்சையை ஒரு தொழிலாகச் செய்பவர்களுக்கு எதிராகவும் பெண்கள், சிறுவர்களைப் பயன்படுத்தி அதனை ஒரு தொழிலாகச் செய்பவர்களுக்கு எதிராகவும் குற்றவியல் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுப்பதைத் தீவிரப்படுத்துவதே போதுமானது. ஆனால் அது மட்டுமே பிச்சையை ஒழிப்பதற்குப் போதுமானதல்ல.

எனவே பிச்சைக்கான சமூகப் புறக் காரணிகள் குறித்து நன்கு ஆராய்ந்து தேவையான புறச் சூழலை ஏற்படுத்திய பின்பே இது தொடர்பான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டப்படவேண்டும்.

# அதிகாரிகளின் தவறு இது!

## எல்நினோ தாக்கத்தை சமாளிக்க முன்கூட்டிய நடவடிக்கை எதுவும் இல்லை

பிரதீத் சம்பத் கருணாதிலக்க



எல் நினோ தோராயமாக 7 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுகிறது. எல் நினோ விளைவு என்பது பூமத்திய ரேகை மின்னோட்ட வடிவங்களில் ஏற்படும் மாற்றங்களால் உலகளவில் நடைபெறும் காலநிலை மாற்றம். கடல் காற்று கடலின் மேற்பரப்பைக் குளிர்விக்கத் தவறி, வெப்பமான கடல்நீருக்கு வழிவகுக்கிறது. இதனையே எல் நினோ என்கிறோம். இதன் விளைவாக, பூமியின் மேற்பரப்பு வெப்பம் அதிகரிக்கும். இதனால் நாடுகளில் வறட்சி ஏற்படும். உலகளவில் பல நாடுகள் எல் நினோ பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. தற்போது இலங்கையில் எல் நினோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை அறிந்திருந்தும், இலங்கை அதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை, பொதுமக்களுக்கு இது பற்றிய எந்தத் தெளிவூட்டலும் வழங்கப்படவில்லை. இதனால் நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எல் நினோ தாக்கத்தின் மத்தியிலும் சில இடங்களில் மழை பொழிகின்றது. எனினும் இந்த வறட்சிக் காலநிலை



ஒக்டோபர் மாதம் வரைக்கும் நீடிக்கும் என்று வானியலாளர்கள் கணிக்கிறார்கள். எல் நினோவின் தாக்கம் மார்ச் மாதத்திற்குள் தெளிவாகத் தெரிந்தது. நீர்ப்பாசன அமைச்சு, மின்சார சபை, விவசாய அமைச்சு மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் நிலைமை குறித்து அறிவித்தது. எனினும், தற்போதுள்ள நீர் ஆதாரங்களை முறையான நடவடிக்கைகளுடன் திறம்பட நிர்வகிக்க அரச அதிகாரிகளால் முடியவில்லை என்று முன்னாள் விவசாயப் பணிப்பாளர் கே.பி. குணரத்ன கூறினார்.

நடைமுறை அறிவின் அடிப்படையில், தென்மேற்கு பருவமழை தொடங்கும்போது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பொதுவாக மழைப்பொழிவு குறைவாக இருக்கும் என்பதை விவசாயிகள் அறிந்திருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரு நாட்டில், நாட்டின் உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் நீர் மேலாண்மை பற்றிய திடமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். வளிமண்டலவியல் திணைக்களம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்த வறட்சி நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அறிவித்தது, என்று குணரத்ன கூறினார்.

வரப்போகும் நிலை குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட பின்னர், விவசாய அமைச்சு, மகாவலி அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை என்பன அதனை எதிர்கொள்ள எடுத்த நடவடிக்கைகள்தான் என்ன என்று அவர் கேள்வி எழுப்பினார்.

2016 - 2017இல், இலங்கை எல் நினோ நிலைமையை எதிர்கொண்டது. இருப்பினும், அது தற்போதுள்ளதைப் போன்ற நெருக்கடியை ஏற்படுத்தவில்லை. பொறுப்பான அதிகாரிகள் சரியான நேரத்தில் மற்றும் அத்தியாவசியமான நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகவே அப்போது நிலமையை எதிர்கொள்ள முடிந்தது என்றும் குணரத்ன மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், இந்த முறை கடுமையான வறட்சியை எதிர்கொள்ள எந்த அதிகாரியும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், குறுகிய கால பயிர்களை பயிரிடவும், வறட்சியின் தாக்கங்களை குறைக்கவும் முடிந்திருக்கும் என்று குணரத்ன மேலும் கூறினார்.

வழக்கமாக, நீர் மேலாண்மைக் குழு ஒரு பருவம் தொடங்குவதற்கு முன்பு கூடுகிறது. இதில் வேளாண் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களும் பங்கேற்கின்றனர்; விவசாயம், நீர்ப்பாசனம், விவசாய சேவைகள், ஏற்றுமதி விவசாயம், மகாவலி அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் அதிகாரிகள் உட்பட. அந்தக் குழு, ஒரு பருவத்தில் எவ்வளவு தண்ணீரை விவசாயத்திற் குத் திறந்துவிடலாம் என்பதை முடிவு செய்யும். பருவத்தின் தொடக்க நாள், நீர் வெளியிடும் நாள் மற்றும் பயிரிட வேண்டிய பயிர்கள். என்பன பற்றி அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். எல் நினோவின் தாக்கம் காரணமாக மார்ச் மாதத்துக்குள் வறட்சி ஏற்படும் என்பது குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் இந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தால், தவறான முடிவுகளை எடுத்தவர்கள் யார் என்பதைக் கண்டறியவேண்டும் என்று குணரத்ன மேலும் தெரிவித்தார்.

சரியான முடிவை எடுத்திருந்தால் பயிர் சேதம் என்ற வகையில் பெரும் இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது குற்றச்சாட்டு விவசாயத்துறை அமைச்சரை நோக்கியதாக இருக்கின்றது.

குணரத்ன கூறுவதைப் போலன்றி, இந்த வருடம் ஜூலை மாதமே நீர் மேலாண்மைக் கூட்டம் நடைபெற்றது. யால அல்லது மஹா பருவத்துக்குள் இடம்பெறவில்லை. பொதுவாக, பருவகாலம் தொடங்குவதுற்கு முன்னர் கூட்டம் மார்ச் மாதம் நடக்கவேண்டும். 2016, 2017 முதல் இலங்கையில் முறையான பருவகால நீர் மேலாண்மைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. இரண்டு நாள் கூட்டம், வேளாண் துறை அமைச்சர் தலைமையில் நடப்பதுதான் வழமை. இம்முறையும் அது நடத்தப்படவில்லை. எனவே, ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு விவசாயத்துறை அமைச்சர்தான் பொறுப்பேற்கவேண்டும். ஊடகங்கள் முன் தோன்றி தனது வயல்களும்தான் அழிந்துவிட்டன என்று பச்சாதாபத்தை உருவாக்குவதை விடுத்து தவறுக்கு அமைச்சரே நேரடியாக பொறுப்பேற்க வேண்டும் என்கிறார் குணரத்ன.

மேலும், பயிர் சேதங்களுக்கு விவசாய அமைச்சின் செயலாளரும் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குணரத்ன கூறினார்.

இந்த ஆண்டு வறட்சியால் பயிர் சேதம் ஏற்பட்டாலும், நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது. அரிசி மொத்த விற்பனையாளர்களிடம் போதுமான அளவு இருப்பு இருப்பதே இதற்குக் காரணம். மேலும், யாலா பருவ பயிர்களில் 60 சதவீதம் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்டுள்ளதுடன், பயிர் சேதம் 15 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அரிசி தட்டுப்பாடு இல்லாவிட்டாலும், ஒரு சிறிய அளவு அரிசியை இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கும் என்று குணரத்ன சுட்டிக்காட்டினார்.

யாலா பருவத்தில், சராசரியாக 5 லட்சம் ஏக்கர் நெல் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு, 4 லட்சத்து 84 ஆயிரத்து 437 ஏக்கர் பரப்பளவில் விதைப்பு நடந்தது. இது இலக்கு நிலப்பரப்பில் 89 சதவீதமாகும். அதன்படி, அறுவடை 1.81 மில்லியன் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விளைச்சல் 15 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தாலும், மீதமுள்ள தொகை நாட்டின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கக்கூடும். தற்போது, பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களிடம், முந்தைய பருவத்து இருந்த நெல் இருப்பு உள்ளது. நெல் விலை குறைந்ததால் விவசாயிகளும் அதனைத் தம்மிடம் இருப்பு வைத்துள்ளனர். எனினும், சிலர் அரிசியின் விலையை செயற்கையாக அதிகரிக்க முயற்சித்து பற்றாக்குறையை ஏற்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அரசு அவதானமாக இருக்கவேண்டும் எனவும் குணரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

2023/2024 பெரும்போகத்திற்கான பருவம் அடுத்த மாதம் தொடங்க உள்ளது. ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஒருவேளை போதிய மழை பெய்யவில்லை என்றால் அதனை எதிர்கொள்வதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகளை முன்கூட்டியே செய்யவேண்டும். நெல் விதைகள், உரங்கள் மற்றும் உயர்தர பூச்சிக்கொல்லிகள் வழங்குவது உட்பட முன்னேற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

இருப்பினும், இதுவரை விவசாயிகளுக்கு அரசிடம் இருந்து கணிசமான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, வெற்றிகரமான பருவத்தை எதிர்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறிதான். பெரும் போகத்தில் நல்ல விளைச்சலை உறுதிப்படுத்த இந்த சவால்களை சமாளிப்பது அவசியம். பெரும்போகத்தில் போதிய நீர்விநியோகம் இல்லாத பட்சத்தில் குறுகிய கால நெல் வகைகளைப் பயிரிடவேண்டும் அல்லது பச்சைப்பயறு, கௌபீ, தினை போன்ற மாற்று வயல் பயிர்களைப் பயிரிடலாம் என குணரத்ன சுட்டிக்காட்டினார்.

முறையான நீர் முகாமைத்துவத் திட்டம் இல்லாவிட்டால் பெரும்போகம்கூட தோல்வியில் முடியும் என்பது குணரத்னவின் எதிர்வுகூறல்.

இந்த ஆண்டு பயிர் சேதத்திற்கு இழப்பீடு வழங்குவது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு ஹெக்டேருக்கு ஏற்படும் செலவுகளின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமா அல்லது ஒரு ஹெக்டேரில் கிடைக்கும் மொத்த விளைச்சலின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமா என்று முடிவு செய்யப்படவேண்டும். ஒரு ஹெக்டேர் பயிரிடுவதற்கான செலவு தோராயமாக 3 லட்சம் ரூபாய் செலவாகும். பிராந்தியங்களில் சிறிய மாறுபாடுகளுடன். தோராயமான நெல் விளைச்சல் ஹெக்டேருக்கு 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் கிலோ வரை இருக்கும். நாட்டின் சராசரி விளைச்சல் ஹெக்டேருக்கு 3500 கிலோ என எடுத்துக் கொண்டால், ஒரு கிலோவுக்கு 100 ரூபாய் என்ற நிலையான விகிதத்தைக் கருத்தில் கொண்டாலும், இழப்பீடு ஹெக்டேருக்கு 3 லட்சம் முதல் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை இருக்கவேண்டும். தற்போதைய தரவுகளின்படி, 18,500 ஹெக்டேர் அல்லது 46,000 ஏக்கர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரு ஹெக்டேருக்கு 300,000 ரூபாய் இழப்பீடு வழங்கினால்கூட, அரசு மொத்தம் 555 கோடி ரூபாய் செலுத்த வேண்டும். அத்தகைய இழப்பீட்டுத் தொகைக்கு அரசு இணங்கும் என்று நம்புவது கடினம் என்றும் குணரத்ன கூறினார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ஹரின், மனுஷ ஆகியோரிடம் வாக்குமூலம் பெற வேண்டும்!

## டிலான் பெரேரா வலியுறுத்து

சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பாக அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷநாணயக்காரஆகியோரிடமும் வாக்குமூலங்களைப் பெறவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குல் குறித்து செனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'சனல் 4 வெளியிட்டு காணொளியில் உள்ள அதிகமான விடயங்களை தற்போது ஆளும் தரப்பில் உள்ளஇரண்டுஅமைச்சர்கள் முன்னதாகவே நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்கள்.

ஹரின் பெர்னான்டோ மற்றும் மனுசநாணயக்கார ஆகியோர்இந்தவிடயங்களை முன்வைத்திருந்தார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் இவ்வாறான ஆயத்தம் நடக்கின்றது என்பது குறித்து சிலவருடங்களுக்குமுன்னர் ஆளும்தரப்பிலுள்ளஅமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதற்குதொடர்புடையவர் என கூறப்படும் பிள்ளையானும் தற்போது ஆளும் கட்சியிலேயே இருக்கின்றார்.

இவர்கள் நால்வரிடமும் இந்த தாக்குதல் தொடர்பான வாக்குமூலங்களை பெற்று நாட்டிற்கு அறிவித்தால் சரி' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர்கள், காவலாளிகள் அடாவடி

## வேலணை பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் பிரகலாதன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் தாதியர் மற்றும் காவலாளிகளின் அடாவடிநடவடிக்கைகளால் தான் யாழ்ப்பாண மக்கள் வைத்தியசாலையூடாக சேவைகளைப் பெறுவதற்கு விருப்பம்தெரிவிக்காதநிலையுள்ளது என வேலணை பிரதேசசபையின்முன்னாள் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் தெரிவித்தார்.

காய்ச்சல் காரணமாக வைசாளினி என்ற சிறுமியாழ்ப்பாணம்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமையைக் கண்டித்து வியாழக்கிழமை காலை போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கனூலா ஏற்றும் போது இரத்தம்வருவதாகதாய்தாதியரிடம் முறையிட்ட போதும் அவர் அசண்டையீனமாக இருந்துள்ளார். 27 ஆம் திகதி மருந்து ஏற்றப்பட்ட நிலையில் 2 ஆம் திகதி கை அகற்றப்பட்டுள்ளது.

குறித்த விடுதிக்குப் பொறுப்பான வைத்தியர் சரபவணானந்தன் கூட உடனடியாக அவதானித்திருந்தால் கையைக் காப்பாற்றியிருக்கலாம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்தாதியர்மற்றும் காவலாளிகளின் அடாவடிநடவடிக்கைகளால்தான்யாழ்ப்பாண மக்கள்வைத்தியசாலையூடாக சேவைகளைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலையுள்ளது.

யுத்தத்தால் பல உயிரிழப்புகளையும் அங்கவீன இழப்புக்களையும் சந்தித்த எமது மண்ணில் வைத்திய அசண்டையீனங்களால் உயிர்கள் பலியாவதை அனுமதிக்கப்போவதில்லை.

குறிப்பாக தற்சமயம் தீவக வைத்தியசாலையில் இடம்பெறும் இடர்பாடுகள் காரணமாக சிறிய நோய்களுக்கு மருந்துகளைப் பெறுவதற்குக் கூட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையே நாடும் நிலை காணப்படுகின்றது.

இதற்கு முன்னரும் நடைபெற்ற பல உயிரிழப்புக்களும் அங்கவீனங்களாலும்பாதிக்கப்பட்ட மக்கள்வறுமைக்கோட்டுக்குள் காணப்பட்டதாலும் சில சட்ட நுணுக்கங்களை அறிந்திராதகாரணங்களாலும் பூசிமழுகப்பட்டன.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதாக பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தும்இதுவரை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தாதி பணி நிறுத்தத்தின் பின்னரே விசாரணைகளை மேற்கொள்ளப்படவேண்டும். இங்கு மாறாக பணிக்காக வேறு விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையேகாணப்படுகின்றது.

இதேவேளை குறித்த சிறுமியின் பெற்றோரின் கையெழுத்துடனான கடிதம் பொதுமக்களிடம்கையெழுத்து சேகரிக்கப்பட்டபின்னர்ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ளது.

எனவே, குறித்த விடயத்தில் நேரடியாக சம்பந்தப்படும்தாதியர்உட்பட ஏனையோருக்கெதிராக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு பணி நீக்கம் செய்யப்படவேண்டும். - என்றார். (05)

# ஆசாத் மௌலானாவின் பொய்யை நம்புபவர்களுக்குக் கடவுளே துணை

## பெரமுன எம்.பி.டி.வீரசிங்க பிரார்த்தனை

அசாத் மௌலானா, நிஷாந்த டிசில்வா ஆகியோர் டொலருக்காக நாட்டை காட்டிக்கொடுக்கிறார்கள். புகழிடகோரிக்கைக்காக சனல் 4 வுக்கு இவர்கள் குறிப்பிடும் பொய்யை இந்த நாட்டு மக்கள் நம்புவார்களாயின் அவர்களுக்குகடவுள்துணை புரியவேண்டும்எனஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வீரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

உயிர்த்தஞாயிறுகுண்டுத் தாக்குதல்சம்பவம்தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவின் தேர்தல்வெற்றிக்காக குண்டுத்தாக்குதல்நடத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் 2018 .02.10 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன அமோக வெற்றிபெற்றது. பயங்கரவாதி சஹ்ரானின் குண்டுத்தாக்குதலின்பின்னர் கத்தோலிக்க , முஸ்லிம் சமூகத்தினர் கோட்டபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கவில்லை இதனை எவரும் கதைப்பதில்லை.

அசாத் மௌலானா, சானியா பீரிஸ்,நிஷாந்த டிசில்வா,லசந்தவிக்கிரமதுங்களின் சகோதரத் லால் விக்கிரமசிங்க ஆகியோர் டொலர் பேராசையால் சர்வதேச மட்டத்தில் இருந்துகொண்டு நாட்டைக் காட்டிக் கொடுக்கிறார்கள். இறுதிக்கட்ட யுத்தத்தில் நந்திக்கடலில் பிரபாகரன் அகப்பட்டார். பிரபாகரனை விடுவிக்குமாறு சர்வதேசம் வலியுறுத்தியது. ஆனால் ராஜபக்ஷர்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

ராஜபக்ஷர்கள் பிரபாகரனை விடுவித்திருந்தால் சனல் 4 இன்று ராஜபக்ஷர்களுக்கு எதிராக செயற்பட்டிருக்காது. ராஜபக்ஷர்கள் மீது வைராக்கியத்துடன் செயற்படுபவர்கள் டொலருக்கு அடிமையாகி செயற்படுகிறார். சனல் 4 காணொலிக்குஒருசிலஊடகங்கள் முன்னுரிமைவழங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பணத்தை மோசடி செய்து வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ளஅசாத்மௌலானா புகழிடகோரிக்கைக்காககூறும் பொய்யை இந்த நாட்டு மக்கள் நம்புவார்களாயின் அனைவருக்கும்கடவுள்துணைபுரிய வேண்டும். - என்றார். (05)

# நால்வர் கைது

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் பேலியகொட பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது விபச்சார விடுதியொன்றை சுற்றிவளைத்து அங்கிருந்த நால்வரை கைது செய்துள்ளனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மசாஜ் நிலையம் நடத்துவதாககூறி இந்த விபசார விடுதி நடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இதன்போது முருத லாவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஆண் ஒருவரும், 30, 31மற்றும் 38 வயதுடையநுவரெலியா, மாரவிலமற்றும்பிலிமத்தலாவ ஆகிய பகுதிகளில் வசிக்கும்மூன்று பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத்தெரிய வந்துள்ளது. (05)

# 'லீமர்ஸ்' விலங்குகள் 'ஈமு' பறவைகள் இலங்கைக்கு வந்தன

*'ஈமு' பறவைகள் ஆஸ்திரேலியாவை பூர்வீகமாகக் கொண்ட பறக்காத பறவையினங்கள் ஆகும். ரிங் டெயில்லீமர்ஸ் என்பது மடகாஸ்கரைபூர்வீகமாகக் கொண்ட அழிந்து-வரும்ஒரு விலங்கினமாகும்.*

*2 வயதுடைய இரு ஆண் ரிங் டெயில் லீமர்ஸ்களும் 11 வய-துடையஇரண்டுபெண் ரிங் டெயில் லீமர்ஸ்களும் இலங்கைக்கு செக் குடியரசால் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று ஆஸ்திரேலியாவால் ஈமு பறவைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் இலங்கைக்கு வந்துள்ளன.*

*இந்த விலங்குகள் துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து புதன்கிழமை இரவு 9.10 மணியளவில் இலங்கையை வந்தடைந்தன.*

*இந்த விலங்குகள் ஒருமாதத்துக்குபின்னர் பின்னவல, வகொல்ல மிருகக்காட்சிசாலையில் வைத்து பராமரிக்கப்படும்.*

*பின்னவல, வாகொல்ல மிருகக்காட்சிசாலையின் கால்நடை வைத்தியர் மலித் லியனகே, தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மேனகா பத்திரகேஉள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்று இந்த விலங்குகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.( 05)*

# வவுனியா இரட்டைக் கொலை; மேலும் மூவருக்கு பிடியாணை

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் மூவருக்கு வவுனியா நீதிமன்றம் வியாழக்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர்உயிரிழந்திருந்தனர்.

இந்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில்ஆறுபேர்கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கைஎடுத்திருந்தனர்.

அந்த மூவரும் தலைமறைவாக உள்ளதால் அவர்களது கடவுச் சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைது செய்ய வவுனியாநீதிமன்றம்பகிரங்க பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்கு வியாழக்கிழமை திகதியிடப்பட்டிருந்தது. எனினும், அடையாளஅணிவகுப்புக்கு உரிய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதால் இந்த வழக்குக்கான அடையாளஅணிவகுப்புஎதிர்வரும் 21ஆம் திகதிக்கு மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. (05)

# கணவன் தாக்கி மனைவி இறப்பு



கம்பளை வெலம்பொட பிரதேசத்தில் கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறின்போது கடுமையாக தாக்கப்பட்ட 24 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார் என வெலம்படை பொலிஸார் தெரிவித்தனர்.

உடுநுவர வெலம்பொட லொகுஅங்க பகுதியைச்சேர்ந்த 24 வயதுடைய அமலி லக்மினி சேனாநாயக்க என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மனைவி நீண்ட நேரமாக கையடக்கத் தொலைபேசியில்பேசியதைஅறிந்தகணவன், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் சமையல் அறையில் இருந்த தடி ஒன்றால் மனைவியை தாக்கியுள்ளார்.

இதன்போது பலத்த காயமடைந்த மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேகத்தின் பேரில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# அதிகாரிகளின் தவறு இது!....

(4ஆம் பக்கத்தொடர்ச்சி..)

கடுமையான பேரிடரை எதிர்கொள்வதில் அதிகாரிகள் காட்டிடய அலட்சியத்தால் ஏற்பட்ட நெருக்கடியின் தீவிரத்தை இந்த நிலைமை காட்டுகிறது என்று அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

ஆளும் தரப்பைச் சேர்ந்த சிலர் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தயக்கமின்றி வறட்சியைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம். அதில் அவர்களுக்குக் தரகுப் பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகம் உண்டு. அரிசி ஏற்றுமதியை இந்தியாதடைசெய்துள்ளது. வெங்காயத்திற்கு 40 சதவீத வரிவிதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், உள்ளூர் அரிசி கையிருப்பைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது. 2022ஆம் ஆண்டு மாத்திரம் 7 லட்சத்து 83 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு 87 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. நாட்டிற்குள் சரியான விவசாயக் கொள்கை இல்லாததால் இந்த நிலைமை உருவாகியது,

இது தேசத்தைக் கடுமையான இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏப்ரல் 2023இல், நாட்டின் பணவீக்கம் 33.3 சதவீதமாக உயர்ந்தது, உணவுப் பணவீக்கம் 30.6 சதவீதமாக இருந்தது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2022 இல் 4.6 வீதமாகவும் 2023 இல் 7.8 வீதமாகவும் சுருங்கியது. இதன் விளைவாக, எதிர்நோக்கும் சவால்கள் இலகுவானவை அல்ல என்பதே குணரத்னவின் கருத்து.



குணரத்ன சொல்லபவற்றில் பலவற்றையும் துறைசார் அதிகாரிகள் ஏற்றுக்கொள்கிறார்கள். ''பெப்ரவரியில் இந்த வறண்ட வானிலை பற்றிய தகவலை நாங்கள் ஏனைய திணைக்களங்களுடன் பகிர்ந்துகொண்டோம் என்கிறார் வானிலை ஆய்வாளரான ஜனக குமார.

தற்போது, எல் நினோவின் தாக்கம் உட்பட பல்வேறு காரணிகளால் இலங்கையில் வெப்பநிலை உயர்வடைகிறது. இந்தப் பாதிப்பு அடுத்த ஆண்டு வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அடுத்த மாதத்திற்குப் பிறகு எங்கள் சூழ்நிலைகள் மாறும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

தற்போது, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வவுனியா போன்றமாவட்டங்களில்அதிக வெப்பநிலைநிலவுகிறது. மார்ச் மாதம், தற் போதுள்ள வறட்சி நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தோம். மழைக் காலம் நெருங்கும்போது வழக்கமாக சம்பந்தப்பட்ட திணைக்களஅதிகாரிகளுக்குவானிலை முன்னறிவிப்புக்களைத் தருவதே எங்கள் பணி. அதனடிப்படையில் திணைக்களத்தலைவர்கள், அதிகாரிகள் கலந்துரையாடி முடிவுகளை எடுப்பார்கள். அவர்களுக்கு எதிர்கால வானிலைக் கண்ணோட்டத்தைப் பற்றிய நுண்ணறிவை நாங்கள் வழங்குகிறோம். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அந்தந்த அரசு நிறுவனங்களால் அடுத்தடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கு மேல் எங்களால் எதுவும் செய்ய முடியாது. பெப்ரவரியில் இந்த வறண்ட வானிலை பற்றிய தகவலை நாங்கள் மற்றைய திணணக்களங்களுடன் பகிர்ந்து கொண்டோம் என்கிறார் ஜனக குமார.

அப்படியிருந்தும் ஏன் முறையான முகாமைத்துவ, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேள்வி எழுப்பினோம். மகாவலி மற்றும் விவசாய திணைக்களம் போன்ற பல்வேறு அரச திணைக்களங்களுக்கு நீர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் இந்த நிலைமை குறித்து அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் பயனுள்ள நீர் மேலாண்மை முடிவுகள் எடுக்கப்படவில்லை. மகாவலி அதிகார சபையின் பொறியியலாளர்கள் நெல் மற்றும் ஏனைய மேலதிக பயிர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பான தகவல்கள் விவசாய அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், உத்தேசிக்கப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை, இதன்விளைவாகநெற்செய்கைக்குமுன்மொழியப்பட்ட அணுகுமுறை பின்பற்றப்படவில்லை. நிலைமை பயிர் சேதத்தைவிட அழிவு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது, என்று அவர் விளக்கினார் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர்.

குற்றச்சாட்டுக்கள் குறித்து விவசாய அமைச்சின் செயலாளர் குணதாசசமரசிங்கவிடம் இருந்து பதிலைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அதனால் அமைச்சின் கருத்து என்ன என்பதை அறிய முடியவில்லை. மின்சார சபையிலும் எந்த அதிகாரியையும் இது தொடர்பான விளக்கத்தையும் தரத் தயாராக இருக்கவில்லை.

(மூலம்: டெய்லி மிரர்)


JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Sri Lanka
Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி SINCE 1930
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir

# மருந்தகங்களுக்கு அனுமதி இல்லை மதுச்சாலை திறக்க உடனடி அனுமதி

## வன்னியின் நிலை இதுவென வினோ நோகராதலிங்கம் சாடல்

வன்னியில் புதிதாக மருந்தகங்களை அமைக்க அனுமதி வழங்குமாறு பல முறை வலியுறுத்தப்பட்டும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. மாறாக புதிதாக பல மதுபான சாலைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படும் தரப்பினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் புதிதாகமதுபானசாலைகளைஅமைப்பதால் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்றசுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டில் 20,000 வைத்தியர்களில் 1,500 பேர் நாட்டைவிட்டுசென்றுள்ளதுடன் மேலும் 5,000 பேர் வெளிநாடு செல்லத் தயாராகி வருகின்றனர். ஆசிரியர்கள் பற்றாக்குறையால் பாடசாலைகள் மூடப்படுவதைபோன்றுவைத்தியசாலைகளும் மூடப்படுமா? என்று எண்ண வேண்டியுள்ளது. இவ்வாறு இவர்கள் வெளியேறி செல்ல அரசாங்கம்தான் காரணமென்றால் இதுவரையில் அரசாங்கம் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கேட்கின்றேன். அண்மையில் யாழ். வைத்தியசாலையில் 8 வயது சிறுமியொருவரின் கை அகற்றப்பட்டுள்ளது. அவர் காய்ச்சலுக்காக சென்றவர். வைத்தியர்கள், தாதிகள் விரக்தியில் இருப்பதாலேயே இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன. அரச வைத்தியசாலைக்கு நோயாளர்கள் செல்லஅஞ்சுகின்றனர். இந்தநிலைமைமாற்றப்பட வேண்டும். இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சுகாதார அமைச்சருக்காக மாத்திரமன்றி முழு அரசாங்கத்துக்கும் எதிராகவேகொண்டுவந்திருக்கவேண்டும்.

வன்னியில் மருந்தகங்களை அமைக்க சுகாதார தரப்பினரிடம் அனுமதி கோரியிருந்த போதும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. ஆனால் வன்னியில் புதிதாக மதுபான சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மதுபானசாலைகள் பலவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

அரசாங்க கட்சியை சேர்ந்தவர்களுக்கு இது வழங்கப்படுகின்றதா என்பது பிரச்சினையில்லை. ஆனால் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் நேரத்தில் இவ்வாறு மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்குவது எதற்காக என்று கேட்கின்றேன். புதிதாக இவ்வாறு மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கி அவர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கருதுகின்றோம். மக்களை படுகுழிக்குள் தள்ளிவிட்டு அரசியல்வாதிகளை மாத்திரம் முன்னேற்ற எடுக்கும் முயற்சிகள் மாற்றப்பட வேண்டும். இது மக்களுக்கான அரசாங்கமாக இருக்காது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித புதைக்குழி தோண்டப்படுகிறது. சர்வதேசபரிமானங்களுக்குஅமைய அங்கு பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய புதைகுழி தோண்டப்பட்டாலும், நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனை குருந்தூர் மலை விகாரை நிர்மாணிப்பு ஊடாக விளங்கிக் கொள்ள முடிகிறது. - என்றார். (05)

# பொருளாதார நெருக்கடிக்குள்ளும் கல்வி, சுகாதாரத்துக்கு அதிக நிதி

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் பெருமிதம்

பொருளாதாரப் பாதிப்பு மத்தியில் கல்வி துறைக்கும் சுகாதாரத் துறைக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார துறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளை அரசியல் நோக்கத்துடன் பார்க்கக் கூடாது.

ஏனைய அமைச்சுக்களை காட்டிலும் சுகாதார அமைச்சுக்கு இரண்டு தடவைகள் மேலதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

சிரேஷ்ட அரசியல்வாதியான கெஹலிய ரம்புக்வெல்ல நெருக்கடியான சூழலில்தான்சுகாதாரஅமைச்சைப் பொறுப்பேற்றார்.

பொருளாதாரப்பாதிப்பின் பின்னரான காலப்பகுதியில் சுகாதார துறையின் சேவை கட்டமைப்பில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை அரசாங்கம் ஒருபோதும்மறுக்கவில்லை. நெருக்கடியான சூழலில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் இலவச சுகாதார சேவையை மேம்படுத்த பொறுப்புடன் செயற்பட்டுள்ளன என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட முடியும். 2016 ஆம் ஆண்டு 629 ஆக காணப்பட்ட அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை தற்போது 648 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு லட்சம் பேருக்கு 19 வைத்தியர்கள் சேவையில் இருந்தார்கள். அந்த எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டு ஒரு லட்சத்துக்கு 44 வைத்தியர்களாகவும், 2021 ஆம் ஆண்டு ஒரு லட்சத்துக்கு 101 வைத்தியர்கள் என்றும் வைத்திய சேவைகள் உயர்வடைந்துள்ளன.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகளை காட்டிலும் இலங்கையில் தான் இலவச சேவைக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

செல்வந்தர்களும், ஏழைகளும் இலவச மருத்துவ சேவையில் சமமாக மதிக்கப்படுகிறார்கள். 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 71 லட்சம் பேர் அரச வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

அதே போல் 2020 ஆம் ஆண்டு 63 லட்சத்துக்கும் அதிகமானோரும், 2022 ஆம் ஆண்டு 53 லட்சம் பேருக்கு அதிகமானோரும் அரச வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளார்கள்.

ஆகவே தனியார் வைத்திய துறையை காட்டிலும் அரச வைத்திய சேவையை நாட்டு மக்கள் முழுமையாக நாடுகிறார்கள்.

பொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியிலும் கல்வி மற்றும் சுகாதார துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்திலும்அதிக நிதி சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம்அவசரதேவை என்றஅடிப்படையில்ஏனைய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தில் இருந்து 5 சதவீதம் அறவிடப்பட்டு அந்த நிதி சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் சுகாதார சேவை குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. - என்றார். (05)

# பொலிஸ் என்று அ.அட்டை காட்டி பெண்களை ஏமாந்றியவர் கைது

வலான ஊழல் தடுப்பு பொலிஸ்பிரிவைச்சேர்ந்தவர் என போலி அடையாள அட்டையைக் காட்டி பெண்களை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்களிடம் தங்க நகைகள் மற்றும் பணத்தையும் சந்தேக நபர் அபகரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மொரந்துடுவ பொலிஸாரே குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் குருணாகல் வீரம்புகெதர பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் முன்னாள் இராணுவ சார்ஜன்ட் எனவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல, பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# நெல்லியடியில் வாள்களுடன் ஒருவர் கைது

யாழ். மாவட்டம், நெல்லியடியில் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் வாள்களுடன் நடமாடிய ஒருவரைத் தாம் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 33 வயதானவர். அவரிடமிருந்து 3 கிராம் 80 மில்லி கிராம் நிறை கொண்ட ஹெரோயின் போதைப்பொருளையும் 3 வாள்களும் கைப்பற்றப் பட்டன என்றும் அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

# காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கு ஆதரவாக மன்னாரில் போராட்டங்கள்

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிக்கு ஆதரவாக வியாழக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. மன்னார்மாவட்டத்தில் காற்றாலைமின்உற்பத்திதிட்டத்தின் 2 ஆம் கட்ட பணிக்கு தொடர்ச்சியாக மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வரும் நிலையில், வியாழக்கிழமை இந்தத் திட்டத்திற்கு ஆதரவாக மன்னாரில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள நடுக்குடா கிராமத்தைச் சேர்ந்தவர்களாலேயே இந்தப் போராட்டம், மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சுமார் 40 பேர்வரை கலந்து கொண்டு, பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நடுக்குடா, காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2 ஆம் கட்ட பணியை தாமதம்இன்றி முன்னெடுக்க வேண்டும்என்றும்அதனால் வேலை இல்லாத பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் இதில் கலந்து கொண்டிருந்தோரால் தெரிவிக்கப்பட்டது. மேலும், பொது அமைப்புக்கள் தமது இலாப நோக்கத்துக்காகவே இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பை முன்னெடுத்துவருவதாகவும் போராட்டத்தில்ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்துக்கு மக்களை ஏமாற்றியே, ஏற்பாட்டாளர்கள் அழைத்து வந்துள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வேலையற்றோர் சங்கம் என்றஓர்அமைப்பினாலேயே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தபெண் ஒருவர், குறித்தபோராட்டத்தில் கலந்து கொண்டால் தங்களுக்கு காற்றாலை மின்உற்பத்திதிட்டபணியில் வேலை பெற்று தருவதாக கூறியமைய காரணத்தினாலேயே இதில் கலந்து கொண்டதாக தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைமின்உற்பத்திதிட்டத்தின் 2ஆம் கட்ட பணிக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றநிலையில்ஒருசிலர் தமது சுய இலாபத்திற்காக மக்களை ஏமாற்றி இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்எனசமூக செயற்பாட்டாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (05)

# சுகாதாரத்துறை மீதான சந்தேகம் தீர புதிய ஆட்சி ஒன்று அமைவதே தீர்வு

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

மருந்து இறக்குமதிக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டால் அதனை மறுப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை.

என்றாலும் அது இடம் பெறாதமையே நாட்டில் தரம் குறைந்த மருந்து இறக்குமதிக்கு காரணமாகும். அத்துடன்கடந்தகாலங்களில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டவர்களில் 70பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தரமற்ற மருந்து காரணமாக 20பேர் மரணித்துள்ளனர்.

ஆனால் இது தொடர்பாக சட்ட ரீதியில் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம் பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டுக்கு தேவையான மருந்துப் பொருள்களைக கொண்டுவரும் சகல அதிகாரம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கே இருக்கிறது.

தேவையான மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்யுமாறு அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டால் அதனை மறுப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சட்ட ரீதியில் எந்த அதிகாரமும் இல்லை. என்றாலும் தற்போது அதுவே இடம்பெறுகிறது.

அதேபோன்று தரம் குறைந்த மருந்து கொண்டு வந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது.

131ஆம் உறுப்புரையின் கீழ் தண்டனை வழங்க முடியும். ஆனால் தரம் குறைந்த மருந்துகொண்டு வந்திருப்பதாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு வழக்குகூட தொடுக்கவில்லை.

அத்துடன் மயக்க மருந்து, நுண்ணுயிர்கொல்லி மருந்து வழங்கியதன் மூலம் 10 மரணங்கள் இடம் பெற்றுள்ளன என ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

அதேபோன்றுசிறுநீரகம் தொடர்பான சிகிச்சையில் கண்டி, பேராதனை வைத்தியசாலைகளில் 10 பேர் மரணித்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

மேலும் நுவரெலியா மற்றும் கொழும்பு கண் வைத்தியசாலைகளில் கண் சத்திரசிகிச்சைகளுக்கு பின்னர் 70பேரின் கண் பாதிக்கப்பட்டுள்ளதாக ஊடக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதில் ஒன்று தொடர்பாகவேனும் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை. ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அறிக்கைகள் பொய்யா என கேட்கிறோம். அத்துடன்நாட்டில் மருந்துப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட, அரசாங்கத்திடம் மருந்துப் பொருள்களை கொண்டுவர பணம் இல்லாமையும் காரணமாகும்.

இதற்கு அரசாங்கமே பொறுப்பாகும். அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் வரி குறைப்பு செய்து நாட்டின் வருமானத்தை இல்லாமலாக்கொண்டது. தற்போது வரி அதிகரிப்பு செய்திருக்கின்றபோதும் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளதால் வரி அறவிட முடியாமல் இருக்கிறது.

மேலும் இலவச சுகாதாரம் தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. இது மிகவும் பயங்கரமானது. அரசாங்க வைத்தியசாலைகளில்வழங்கப்படும் மருந்து தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். ஆரம்ப காலத்தில் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருபவர்களும் இறுதி நேரத்தில் அரச வைத்தியசாலைக்கே வருகின்றனர்.

ஆனால் தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. மக்களின் இந்த மன நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

எனவே இந்த நிலைமையை சரி செய்வதற்கு புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும். அதற்கு தேர்தலுக்குசெல்லவேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாட்டால் நாட்டின் அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. இதற்கு தீர்வுகாண ஒரே வழி புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதாகும். அதன் மூலமே சுகாதார துறைதொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். - என்றார். (05)

# சமுர்த்தி வங்கி சங்கத்தின் செயலமர்வு சாய்ந்தமருதில்



சமுர்த்தி வங்கிகளின் செயற்திறனை வலுவூட்டும் நோக்கில் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸால் தயாரிக்கப்பட்ட சமுர்த்தி வங்கியின் செயற்திறன் மதிப்பீட்டு அறிக்கை கைந்நூல்பற்றிசாய்ந்தமருது பிரதேச செயலக வெளிக்கள சமுர்த்தி உத்தியோ கத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச்சங்கமுகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வுக்கு அம்பாறை மாவட்ட சமுர்த்தி காரியாலவங்கிகண்காணிப்பு உத்தியோகத்தர் ஏ.ஜே.எம். ஹனீபா கலந்து கொண்டார்.

இதில் பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.நிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா உள்ளிட்ட சாய்ந்தமருதுபிரதேசசெயலக வெளிக்களசமுர்த்திஉத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இறுதிப் போரில் சரணடைந்தோரினது

## ரவிகரன் கருத்து

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருப்பது, 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த முன்னாள் போராளிகளின் மனித எச்சங்களே என முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படுகின்ற உடைகள், கண்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாமெனச் சந்தேகிக்கக்கூடிய துணிகள், துப்பாக்கிச் சன்னங்கள் உள்ளிட்ட தடையப் பொருள்கள் அதையே உணர்த்துகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி இரண்டாம்நாள் அகழ்வாய்வுகளை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளின்போது, துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த பெண்களுடைய ஆடைகள், கண்களுக்கு கட்டுவதற்கு பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கக்கூடிய வகையிலான துணி, என்பன தடையப் பொருள்களாக மீட்கப்பட்டுள்ளதுடன், மனித எச்சங்களும் பகுதியளவில் மீட்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இங்கு இன்னும் பல மனித எச்சங்கள் இனங்காணப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பே காணப்படுகின்றது.

இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது, கடந்த 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகளை இங்கு கொண்டுவந்து கண்களைக் கட்டி, சித்திரவதைக்குட்படுத்தி, துப்பாக்கியால் சுட்டு படுகொலைசெய்து இங்கு புதைத்துள்ளார்கள் என்பதே எனது நிலைப்பாடாகவிருக்கின்றது. மேலும் கடந்த ஜீலை மாதம் 06 ஆம் திகதி இந்தப் பகுதியில் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மேற் கெள் எப்பட்டபோது, இந்த இடங்களில் புலனாய்வாளர்கள் விதைக்கப்பட்டுள்ளார்கள் என எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.



இந் நிலையில் கடந்த செப்ரெம்பர் 06 வியாழனன்று இங்கு முதல்நாள் அகழ்வுப் பணிகள் முடிவுறுத்தப்பட்டதன் பிற்பாடு, மனிதப் புதைகுழி வளாகம் பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்தபோது புலனாய்வாளர்கள் உள்நுழைந்து புகைப்படங்கள் எடுத்துள்ளனர். எனவே இங்கு பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் என்ன பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எனவேதான் நாம் இந்த அகழ்வுப் பணிகளில் சர்வதேச கண்காப்பைத் தொடர்ந்து கோரிவருகின்றோம்.


இவ்வாறு புலனாய்வாளர்களின் அத்துமீறல்செயற்பாடு இருந்தமையால்தான், இரண்டாவதுநாள் அகழ்வுப்பணிகளில் முல்லைத்தீவு நீதிமன்றநீதிபதிமுழுமையான அவதானத்தைச்செலுத்தியிருந்தமை அவதானிக்கமுடிந்தது. அந்தவகையில்நாம் நீதிமன்றை முழுமையாக நம்புகின்றோம்.

எனினும்குருந்தூர்மலைவிவகாரத்தில் மூன்றுமுறை நீதிமன்றக் கட்டளையை மீறிய தொல்லியல் துறையினர் மீது எமக்கு அதிருப்தியிருக்கின்றது.

ஆகையினாலேயே யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் பீடத்தினரை இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக்கொள்ளுமாறுகூறுகின்றோம். இந் நிலையில் தமிழ் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஸ்பரட்ணம் மூன்றாம் நாள் அகழ்வாய்வுகளில் பங்கேற்பார் எனவும் அறியக்கூடியவாறுள்ளது.

மேலும் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத்தன்மைகள் வெளிப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு - என்றார்.(05)

# தேசிய தொழு நோய்த்தடுப்பு இயக்க பிரசன்னத்துடன் விசேட பயிற்சி நெறி





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தேசிய தொழுநோய் தடுப்பு இயக்கம் மற்றும் கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு என்பன இணைந்து தொழுநோய் ஒழிப்பு தொடர்பான விசேட கருத்தரங்கை வியாழக்கிழமை கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

கல்முனை பிராந்திய தொற்று நோய்த்தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். பஸாலால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ், தேசியதொழுநோய்தடுப்புஇயக்கத்தின் பணிப்பாளர்டாக்டர்பிரசாத்ரணவீர, பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ. வாஜித், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன் டாக்டர் டிலினி விஜயசேகர, தோல்நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஐ.எல்.மாஹில் ஆகியோர் விசேட வளவாளர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பணிப்பாளர், தமது குழுவினர் வைத்தியசாலைகளுக்கு மாத்திரமின்றி தனியார் சிகிச்சை நிலையங்கள், மத நிறுவனங்களுக்கும் சமுகமளித்து இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் விசேடமாக வெளி நோயாளர் பிரிவுகளில் இவ்வாறான செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு விசேட பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளதாகவும் துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை அனைத்து நிறுவனங்களுக்கும் விநியோகித்துவருவதாகவும் தொழுநோயை கல்முனை பிராந்தியத்திலிருந்து முற்றாக ஒழிப்பது தனது தலையாயக் கடமை என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் இருந்து தொழுநோய் பிரிவுகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் பங்குபற்றுநர்களாக பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அட்டாளைச்சேனை வைத்தியசாலைகள நிலைவரம் தொடர்பில் ஆராய்வு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி, உயிரியல் மருத்துவப்பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு நடைபெறும் பீ.எஸ்.எஸ்.பீ செயற்றிட்டம் தொடர்பான வேலைத்திட்டங்கள் மற்றும் பொதுமக்களால் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி கலந்துரையாடலின் போது கல்முனை பிராந்திய மருந்துவிநியோகப் பிரிவை குறித்த வைத்தியசாலைக்கு இடம் மாற்றுவதனை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களிடமும் தமது பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. மேலும் வைத்தியசாலையிலிலுள்ள உபகரணங்களின் நிலைமை மற்றும் பாவனைக்குட்படுத்தப்படும் நடைமுறைகள் தொடர்பிலும் நேரடி அவதானம் செலுத்தப்பட்டது. இந்த விஜயத்தின் போது கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளையும் சிபாரிசுகளையும் விரைவில் செய்வதற்கான பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதுடன் இதனை விரைவுபடுத்துமாறும் பணிப்பாளர் குறித்த குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்தார். (05)

# மதுபான போத்தல்களில் போலி முத்திரைகள் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மதுபானபோத்தல்களில் போலி ஸ்டிகர்களை பதித்த மதுபான நிறுவனங்களுக்கு எதிராக தற்போது வரையில் 52 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுற்றுலா அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக 2022 ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக மது விற்பனைக்கான அனுமதி பத்திரங்களை வழங்குவது தொடர்பிலேயே குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அதற்கமைவாக தற்போது வரையில் 538 அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எவ்வித வேறுபாடும் இன்றி சுற்றுலா அனுமதி பத்திரம் உடைய ஒருவருக்கு இந்த மது விற்பனைக்கான அனுமதி பத்திரம் ஒன்றை அவர்களின் வியாபார நிலையங்களுக்குக் கோர முடியும்.

பாதுகாப்பான ஸ்டிகர்களுடன் சந்தேகத்திற்கிடமான சுமார் ஒரு லட்சம் மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

அதில் 180 மில்லி லீற்றர் கொண்ட 43 ஆயிரத்து 776 போத்தல்கள் போலியானவை என உறுதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு போலி மதுபானம் தொடர்பாக கைது செய்யப்பட்ட எவரும் விடுதலை செய்யப்படவில்லை.

உறுதிப்படுத்தப்பட்டுள்ள போலி மதுபான போத்தல்களுக்கு தற்போது உறுதி செய்யப்பட்டுள்ள சட்டரீதியான ஸ்டிக்கர் பயன்;பாட்டிற்காக இதுவரையில் 52 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையில் மாத்திரமே அவர்களுக்கு தண்டப்பணம் செலுத்தவும் கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆகவே இந்த குற்றச்சாட்டுகளுக்கு எவ் வித மன்னிப்பையோ சாதாரணத்தையோ பெற் றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கு புதிய வேந்தர்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ஜயந்த பலவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் பேராசிரியர் ஜயந்த பலவர்தன ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் எதிர்வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# 'தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு' கொழும்பில் நூல் வெளியீட்டு விழா



இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சொற்கோ வி.என். மதிஅழகனின் 'தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு' நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ் சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் புரவலர் ஹாசிம் உமர், ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் மா. தவயோகராஜா, அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சந்துரூ பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(05)

# ஜனாதிபதியின் துணிச்சலான முடிவுகளே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டனவாம்

ஜனாதிபதியின் சமயோசிதமானதும் துணிச்சலானதுமான தீர்மானங்கள் நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க உதவியதாக தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 'டிஜிட்டல் மாற்றம், நிலைத்தன்மை, துறைசார் மாற்றங்கள் என்பவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய இயலுமை' என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு துறைசார் தொழிலாளர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் ஊடாகக் கிட்டிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான 16ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று நடைபெற்றது. அதன் தொடக்க நிகழ்விலேயே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில வாரங்களுக்கு முன்னர் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் ஜெனரல் மிலிந்த் பீரிஸுடன் இணைந்து உங்களுக்கு சில வழிகாட்டல்களை வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது. ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகமானது தனது வெற்றியை முழு உலகத்திற்கு காண்பித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தை சேர் ஜோன் கொத்தலாவல எமக்கு நன்கொடையாக வழங்கினார். இன்று இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கியவர்கள் இலங்கையில் மட்டுமன்றி உலக அளவில் திறமைகளை நிரூபித்துள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் தரமான கல்வியே அதற்குக் காரணமாகும். இராணுவத்தினரின் எதிர்காலத்தை மட்டுமல்லாது, ஏனைய மாணவர்களின் எதிர்காலத்தையும் வளமாக்கும் முன்னணி பல்கலைக்கழகமாக மாறியுள்ளது. உயர் கல்வித் துறையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கை கடந்த வருடத்தில் எதிர்கொண்ட மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை போன்ற நிலைமையை பல்வேறு நாடுகள் எதிர்கொண்டுள்ளன.

தற்போது அதிலிருந்து எவ்வாறு மீள முடியும் என்பதையே கண்டறியவேண்டும். அதற்காக ஜனாதிபதி மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளருடன் இணைந்து மேற்கொண்ட சமயோசிதமானதும் துணிச்சலானதுமான தீர்மானங் களின் பயனாக இன்று நாடு ஓரளவு நிலையான தன்மையை அடைந்துள்ளது.

எவ்வாறாயினும், இன்றும் நாம் நெருக்கடியிலிருந்து முழுமையாக மீளவில்லை. நாட்டில் நிலையான அபிவிருத்தியைப் பேணிக்கொண்டு மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நாம் இன்னும் பல முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இன்றைய மாநாடு 'டிஜிட்டல் மயமாக்கல், நிலைத்தன்மை மற்றும் துறைசார் மாற்றத்தின் மூலம் மீட்சியை காணல்' என்ற காலத்திற்கேற்ற தொனிப்பொருளைக் கொண்டுள்ளது. டிஜிட்டல் மாற்றம் என்பது அரச மற்றும் ஏனைய துறைகள் அனைத்தையும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் கீழ் ஒருங்கிணைப்பதாகும். அதற்காக நாட்டில் கலாசார ரீதியிலான மாற்றங்களும் அவசியம். ஒரு நாடு என்ற வகையில் நாம் முன்னேறிச் செல்லும்போது, புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்க வேண்டியதும், செயல்திறன் மிக்க சேவைகளை வழங்க வேண்டியதும் அவசியமாகும்.

நிலைத்தன்மையே முக்கியமானதாகும். நிலைபேறான என்ற சொல்லின் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அவசியமான தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் இயலுமைக்கும் பாதகத்தை விளைவிக்காத வகையிலான தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கான அபிவிருத்தி என்றே பொருள்படும்.

டிஜிட்டல் மயமாக்கலில் வெற்றி காண, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு, முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், சரியான நிபந்தனைகளை விதித்தல், சரியான பாதுகாப்பு தன்மைகளை பேணுதல், உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஆய்வுகள் மற்றும் கல்வியுடன் கூடியதாக மேற்படி முயற்சிக்கான பிரவேசத்தை இலங்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்நாட்டு இளைஞர், யுவதிகளுக்கான கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கான தூரநோக்கு ஜனாதிபதியிடம் உள்ளது. அந்த திட்டங்களுக்கமைய அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2023இல் வெளியிடப்பெற்றது.